

சென்னை, தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (11.09.2024) பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் கிழக்குக் கடற்கரைச்சாலை, திருவான்மியூர் முதல் அக்கரை வரை உள்ள சாலையினை ஆறு வழித்தடமாக அகலப்படுத்தும் பணிகள் முன்னேற்றம் குறித்து ஆய்வுக் கூட்டம் நடை பெற்றது. இக்கூட்டத்தில் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசு செயலாளர் முனைவர் இரா.செல்வராஜ், சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, நீலங்கரை உதவி காவல் ஆணையர் ஏ.பாரத், நெடுஞ்சாலைத் துறை சிறப்பு அலுவலர் (தொழில்நுட்பம்) இரா.சந்திரசேகர், பெருநகர சென்னை தலைமைப் பொறியாளர் எஸ்.ஜவஹர் முத்துராஜ், சென்னை குடிநீர் வாரியம் தலைமைப் பொறியாளர் ஆர். கண்ணன், பெருநகர சென்னை திட்ட வட்டத்தின் கண்காணிப்புப் பொறியாளர் பா.பாஸ்கரன், சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர் (நிலஎடுப்பு) விஜயராஜ், சென்னை மின்சார வாரிய செயற்பொறியாளர் ஏ.ராமு, பெருநகர சென்னை கோட்டப் பொறியாளர் ராஜகணபதி மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள், பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.



நேற்று (12.09.2024) சென்னை, நந்தனம் ஒருங்கிணைந்த வணிகவரி வளாகக் கூட்டரங்கில் நடைபெற்ற அனைத்து இணைஆணையர்களின் பணித்திறன் குறித்த ஆய்வுக் கூட்டத்தில் வரி ஆய்வு குழு பிரிவில் சிறப்பாக பணியாற்றி அரசுக்கு அதிக வருவாய் ஈட்டி தந்தமைக்காக கூடுதல் ஆணையர் எஸ். ஞானக்குமார் அவர்களுக்கு வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி. மூர்த்தி, பாராட்டுச் சான்றிதழ் வழங்கினார். இந்நிகழ்வின் போது வணிகவரித் துறை ஆணையர் முனைவர் டி. ஜகந்நாதன், இணை ஆணையர் (நிர்வாகம்) திருமதி. துர்காமூர்த்தி, ஆகியோர் உடனிருந்தனர்.

# ஆவினில் புதிய பொருட்கள் அறிமுகம்!

## அமைச்சர் மனோ.தங்கராஜ் தகவல்!



வேலூர் செப். 13-

ஆவினில் புதிய பொருட்கள் அறிமுகப்படுத்தப்படும் என்று அமைச்சர் மனோ தங்கராஜ் தெரிவித்தார்.

வேலூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மற்றும் பால் உற்பத்தியாளர்களுடன் கலந்துரையாடல் நிகழ்ச்சி வேலூர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நடைபெற்றது. பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டு துறை இயக்குனர் வினீத் தலைமை தாங்கினார். மாவட்ட ஆட்சியர் வே. இரா. சுப்புலெட்சுமி முன்னிலை வைத்தார். ஆவின் பொது மேலாளர் இளங்கோவன் வரவேற்று பேசினார். பால்வளத்துறை அமைச்சர் மனோ தங்கராஜ் கலந்துகொண்டு 126பயனாளிகளுக்கு ரூ. 82 லட்சத்து 33 ஆயிரம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றி னார்.

அப்போது அவர் பேசியதாவது:

ஒரு கிராமத்தின் பொருளாதாரத்தை நிர்ணயிப்பது பால்வளத்துறை தான். பாலின் வருமானத்தை வைத்துத்தான் விவசாயிகள் சிறு தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள முடியும். கடந்த ஆண்டு 26 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டது . இந்த ஆண்டு 38 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. இத்துறையின் மூலம் கிராமங்கள் வளர்ச்சி பெறுகிறது. வேலூர் மாவட்டத்தில் கடந்த ஆண்டு 90 ஆயிரம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டது . இந்த ஆண்டு ஒரு லட்சத்து 20 ஆயிரம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. பால் வழங்கும் விவசாயிகளுக்கு ஊக்கத் துறையாக ரூ.3 வழங்கப்படுகிறது. இதுவே மைல்கல் தான். தரமான பாலை வழங்கும் விவசாயிகளுக்கு கூடுதலாக ஒரு ரூபாய் வழங்கப்படுகிறது. ஆவினில் புதிய பொருட்கள் அறிமுகம் செய்ய உள்ளோம். விவசாயிகளுக்கு போனஸ் வழங்கப்பட உள்ளது. தீவனத்திற்கு மத்திய அரசு மானியத்தை நிறுத்தி உள்ளதால் தீவனத்தை கூடுதலாக புரதச்சத்தினை கூட்டி தருகிறோம் தன்னிறைவு பெறுவது தான் அரசின் குறிக்கோளாக உள்ளது. அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட்டால் வாழ்க்கை தரம் உயரும் இவ்வாறு அவர் பேசினார். பின்னர் அவர் பால் உற்பத்தியாளர்களுடன் கலந்துரையாடினார். நிகழ்ச்சியில் மாவட்ட கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ, மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல். ஏ இராணிப்பேட்டை மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.எல்.ஈஸ்வரப்பன் எம் எல்ஏ, மாவட்ட ஊராட்சி குழு தலைவர்மு.பாபு, மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# தொன்மையான 266 திருக்கோயில்களில் திருப்பணிகள்!

## மாநில வல்லுநர் குழு ஒப்புதல்!

சென்னை, செப்.13-

தொன்மையான 266 திருக்கோயில்களில் திருப்பணிகள் தொடங்க மாநில வல்லுநர் குழு ஒப்புதல் அளித்துள்ளது.

அதன் விபரம் வருமாறு:-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு அறிவுரையின் படி, சென்னை, நுங்கம்பாக்கம், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அலுவலகத்தில் தொன்மையான திருக்கோயில் களை பழமை மாறாமல் புதுப்பிக்கும் வகையில் திருப்பணிகளுக்கு ஒப்புதல் வழங்கிட மாதம் இருமுறை மாநில அளவிலான வல்லுநர் குழுக் கூட்டம் நடைபெற்று வருகிறது.

அதன்படி 10.09.2024 அன்று மாநில அளவிலான வல்லுநர் குழுக் கூட்டம் இணை ஆணையர் (திருப்பணி) பொ.ஜெயராமன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சென்னை ஜார்ஜ் டவுன், பச்சையம்மன் மற்றும் மன்னார்சாமி திருக்கோயில், கொசப்பூர், பிள்ளையார் திருக்கோயில், திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம், அரசடி விநாயகர் திருக்கோயில், மேலப்பாட்டம், திரிபுராந்தீஸ்வரர் திருக்கோயில், பாளையங்கோட்டை, அழகியமன்னார் இராஜ கோபால சுவாமி திருக்கோயில், தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை, காசி விஸ்வநாதசுவாமி திருக்கோயில், பேராவூரணி, பிடாரி யம்மன் திருக்கோயில், சிவகங்கை மாவட்டம், இளையான்குடி, பாலசுப்ரமணியர் திருக்கோயில், திருப்புவனம், செங்கடியம்மன் திருக்கோயில், மயிலாடுதுறை மாவட்டம், அய்யாவாடி, தருணகணபதி திருக்கோயில், கும்பகோணம், ஆதிகும்பேசுவர சுவாமி திருக்கோயில், மதுரை மாவட்டம், அழகர்கோயில், கள்ளழகர் திருக்கோயில், சொக்கிகுளம், நவநீத கிருஷ்ணன் சக்கரத்தாழ்வார் திருக்கோயில், சேலம் மாவட்டம், சித்திரை ச்சாவடி, சுப்ரமணிய சுவாமி திருக்கோயில், ஓமலூர், குத்தாளம்மன் திருக்கோயில், அரியலூர் மாவட்டம், செந்துறை, முப்பூரீஸ்வரர் திருக்கோயில், மணப்பத்தூர், வரதராஜப்பெருமாள் திருக்கோயில், திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி, சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், இராணிப்பேட்டை மாவட்டம், சோளிங்கர், படவேட்டம்மன் திருக்கோயில், அரக்கோணம் நகர், பாலமுருகன் திருக்கோயில், காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர், சீனிவாசப் பெருமாள் திருக்கோயில், திருப்பெரும்புதூர், மாரியம்மன் திருக்கோயில் உள்ளிட்ட 266 திருக்கோயில்களில் திருப்பணிகள் தொடங்குவதற்கு ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டன.

மாநில அளவிலான வல்லுநர் குழு பரிந்துரைகளின் அடிப்படையில் திருக்கோயில்களில் திருப்பணிகளுக்கு திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு விரைவில் பணிகள் தொடக்கப்படும்.

இக்கூட்டத்தில் ஆகம வல்லுநர்கள் பிச்சை குருக்கள், அனந்தசயன பட்டாச்சாரியார், கோவிந்த ராஜ பட்டர், அங்கீகரிக்கப் பட்ட தகுதி வாய்ந்த ஸ்தபதி முனைவர் கே.தட்சிணாமூர்த்தி, தொல்லியல் துறை வல்லுநர்கள் வெ. இராமமூர்த்தி, முனைவர் சீ.வசந்தி, கண்காணிப்பு பொறியாளர் ச.செல்வராஜ், கட்டமைப்பு வல்லுநர் கே.முத்துசாமி உட்பட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தண்ணீரை திறக்க

# கர்நாடக அரசுக்கு உத்தரவிட வேண்டும்!

## தமிழ்நாடு அரசு வலியுறுத்தல்!

சென்னை, செப்.13–

காவிரி நீர் ஒழுங்காற்றுக் குழுவின் 103வது கூட்டம் அதன் தலைவர் வினீத் குப்தா தலைமையில் காணொலிக்காட்சி மூலம் நடைபெற்றது. தமிழ்நாடு சார்பில் தலைமை பொறியாளர் தயாளகுமார், காவிரி தொழில்நுட்ப குழுமத் தலைவர் சுப்பிரமணியன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில், அக்டோபர் மாதம் தர வேண்டிய 20 டி.எம்.சி. நீரை கர்நாடக அரசு உரிய நேரத்தில் திறக்க உத்தரவிட வேண்டும் என்று தமிழ்நாடு அரசு சார்பில் வலியுறுத்தப்பட்டது.

மேலும், இந்தாண்டு தமிழ்நாட்டுக்கு வழங்கப்பட வேண்டிய நீரினை உச்ச நீதிமன்ற ஆணையின்படி, பிலிகுண்டுலுவில் திறந்து விடுவதில் வரும் மாதங்களில் கர்நாடக அரசு உறுதி செய்ய உத்தரவிடுமாறும் தமிழ்நாடு அரசு வலியுறுத்தியுள்ளது.

இதைத்தொடர்ந்து, தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட வேண்டிய நீரினை மாத வாரியாக உச்சநீதிமன்ற ஆணைப்படி, இனிவரும் நாட்களில் அளிக்க வேண்டும் என்று கர்நாடகாவுக்கு காவிரி நீர் ஒழுங்காற்றுக் குழு அறிவுறுத்தி உள்ளது.

### இணையவழி விளையாட்டுகளால் ஏற்படும்

# பாதிப்புகள் குறித்த விழிப்புணர்வு பிரச்சாரம்!

## தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் தொடங்கி வைத்தார்!

சென்னை, செப்.13-

தமிழ்நாடு இணையவழி விளையாட்டு ஆணையம் சார்பில் இணையவழி விளையாட்டுகளால் ஏற்படும் பாதிப்புகள் குறித்த, பள்ளி கல்லூரி மாணவ, மாணவியர்கள் பங்கேற்ற விழிப்புணர்வு பிரச்சார நிகழ்ச்சி சென்னை எம்.ஆர்.சி. நகர், சாந்தோம் நெடுஞ்சாலை, நகராட்சி நிர்வாக இயக்குநரக கூட்ட அரங்கில் நேற்று முன்தினம் (11.9.2024) நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் இணையவழி விளையாட்டுகளால் ஏற்படும் பாதிப்புகள் குறித்த தமிழ்நாடு அரசின் விழிப்புணர்வு பிரச்சார குறும்படம் திரையிடுவதை தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் தொடங்கி வைத்து பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில் தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் ஆற்றிய உரை வருமாறு:

தமிழ்நாடு அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சி கண்டு இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாக திகழ்கிறது. புதிய தொழில்நுட்பங்கள், இணையம், கணினி, ஸ்மார்ட் போன் போன்றவை வளர்ச்சிக்கு இன்றியமையாததாக உள்ளன. தொழில்நுட்பம் (Technology) இரு பக்கமும் கூராக கொண்ட ஒரு வாள் போன்றது. எப்படி பயன்படுத்த வேண்டும் என்பது நம் கையில் தான் இருக்கிறது.

இணையவழி சாதனங்களின் பயன்பாட்டைப் பொறுத்தவரைக்கும், தொழில் சார்ந்த பயன்பாடுகளையெல்லாம் தாண்டி, தற்போது பொழுதுபோக்குக்காக பயன்படுத்துவது என்பது மிகப்பரவலாக நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வருகிறது. இது காலப்போக்கில் இன்னும் அதிகரித்துக் கொண்டே தான் போகும். ஆனால், இணையவழி சூதாட்டம், இணையவழி விளையாட்டுகள் இவையெல்லாம் சமுதாயத்தில் எது போன்ற தீமைகளை யெல்லாம் ஏற்படுத்துகிறது என்பதையெல்லாம் கருத்திற்கொண்டு தான், இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழ்நாடு அரசு *The Tamil Nadu Prohibition of Online Gambling and Regulation of online games Act*, 2022 என்ற சட்டத்தை உருவாக்கியது. இது போன்ற ஒரு சட்டம் வேறு எந்த மாநிலத்திலும் இல்லை. இதன் மூலம் அமைக்கப்பட்ட தமிழ்நாடு இணையவழி விளையாட்டு ஆணையம் இந்த விளையாட்டுகளை ஒழுங்குப்படுத்துவதற்கும், சூதாட்டத்தை அழிப்பதற்கும் பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறது.

இணையவழி விளையாட்டின் மீது உள்ள மோகம், அடிமை என்பது மிகப்பரவலாக பரவி வருகிறது. குறிப்பாக மாணவர்கள் மத்தியில் கடந்த ஐந்தாண்டுகளாக மிக வேகமாக அதிகமாக வளர்ந்து வருகிறது.

*Internet Gaming Disorder* அல்லது *Pathological Gaming Disorder* என்பது ஒரு *Mental Disorder* ஆகும். இதை நாம் தவிர்க்க வேண்டும். இதற்கு நாம் சரியான சிகிச்சை அளிக்க வேண்டும். 2019 ல் கோவிட் ஏற்பட்ட காலத்தில் பள்ளிகள், கல்லூரிகள் மூடப்பட்டதால், இணையவழிக் கல்வி என்ற போதுதான் அந்த முறைக்கு சென்றோம்.

எங்கள் வீட்டில் என் மகனுக்கெல்லாம் மொபைல் போன் கொடுத்தது கிடையாது. ஆனால், கோவிட் வந்த சமயத்தில் வேறு வழியில்லை. ஆன்லைன் வகுப்பு என்று சொன்னதால் மொபைல் போன் நாம் வழங்க வேண்டியதாக போய்விட்டது. 2023 -இல் ஒரு ஆய்வறிக்கை கிட்டதட்ட 5% பள்ளி, கல்லூரி மாணவர்கள் மத்தியில் இது ஒரு அடிமைத்தனத்தை உருவாக்கி இருக்கிறது என்று சொல்கிறது. ஆனால், அதற்கு மேலும் இருக்கலாம்.

அரிஸ்டாட்டில் அவர்கள் *"Man is by nature a Social Animal"* என்று சொல்லியிருக்கிறார். அதாவது, மனிதன் தொடக்க காலத்திலிருந்தே கூட்டமாகத் தான் வாழ்ந்து இருக்கிறான். அவன் தனியாக இருந்தது இல்லை. அவன் ஒரு சமூக விலங்கு (*social Animal*). அவன் தனியாக, சமுதாயத்தில் ஓர் அங்கமாக இல்லாமல் இருக்கிறான் என்றால் அந்த மனிதன் ஒரு விலங்காக இருக்க வேண்டும் என்று கூறுகிறார். ஏன் என்றால் மனிதன் என்பவன் கூட்டமாகத் தான் இருக்க முடியும். அது தான் அவனது இயற்கை (*Nature*). அந்த இயற்கைக்கு மாறாக இந்த *Online Gaming* அவனை மாற்றுகிறது. மாணவர்கள் ஒரு தீவாக அவர்களை ஒரு நிழல் உலகத்தில் அவர்கள் உலாவிக்கொண்டு வாழ்ந்துக்கொண்டிருப்பது போல் *Online Gaming* உருவாக்குகிறது.

இங்கு குழந்தைகளெல்லாம் வந்திருக்கிறீர்கள். பாரதியார் எழுதிய "பாப்பா பாட்டு" மிகவும் பிரபலமான பாட்டு. ஓடி விளையாடு பாப்பா, நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா, கூடி விளையாடு பாப்பா, என்று பாடியுள்ளார். *Online Game*ல் ஓடியும் விளையாட முடியாது, கூடியும் விளையாட முடியாது. ஆதலால், இது ஒரு வித்தியாசமான ஒரு விளையாட்டு. உடல் ரீதியாகவோ, மனரீதியாகவோ, மாணவர்களின் வளர்ச்சியை மிக வெகுவாக பாதிக்கும். அதனால், நிறைய அரசுகள் இளைஞர்களுக்கு, 18 வயது நிறைவடையாதவர்களுக்கு இந்த விளையாட்டு களை உபயோகப்படுத்த முடியாதபடி இதனை தடை (*ban*) செய்கிறார்கள். சீனா, ஜப்பானில் தடை செய்திருக்கிறார்கள். இன்றைக்குக் கூட பத்திரிகையில் படித்தேன். ஆஸ்திரேலியா அரசாங்கம் 16 வயதிற்கு கீழ் உள்ள மாணவமாணவியர்களுக்கு இந்த *online game*ஐ தடை செய்யவேண்டும் என்ற சட்டம் கொண்டு வரலாம் என்று ஆலோசித்துக் கொண்டிருக்கிறார்கள். இதில் பெற்றோர்கள், ஆசிரியர்களின் கடமை மிக மிக முக்கியமானது.

இரவில் தங்களுடைய குழந்தைகள் மிகவும் கஷ்டப்பட்டு படித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று பெற்றோர்கள் நினைக்கி றார்கள். ஆனால் அவர்கள் *online game* விளையாடிக் கொண்டிருக்கலாம். அதனால் அவர்களுடைய நடத்தையை (*behaviour*) நாம் பார்க்கவேண்டும். விளையாட்டு என்பது மிகவும் முக்கியம். வெளியில் சென்று விளையாட வேண்டும்.

16 அல்லது 18 வயது வரைக்கும் சிலர் *social media*விற்கு அடிமையாகிறார்கள். செல்ஃபோனையும் முடிந்தவரைக்கும் அவர்களிடம் கொடுக்காமல் இருக்கலாம். அந்த இளம்வயதில் அவர்களுக்கு எது சரி, என்று தெரியாது.

நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அரசைப் பொறுத்தவரைக்கும் இளைஞர்கள், மாணவர்களின் நலனில் மிக அதிக அக்கறை கொண்ட அரசு. அவர்களை கண்ணை இமை காப்பதுபோல, இந்த அரசு மாணவ, மாணவியர்களை காத்துக் கொண்டிருக்கிறது. இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு கடந்த மூன்று ஆண்டுகளில் நான் முதல்வன், புதுமைப் பெண், தமிழ்ப்புதல்வன், காலை உணவுத் திட்டம் இது போன்ற பல முத்தான திட்டங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாணவர்களுக்கு வழங்கியிருக்கிறார்கள்.

பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்களின் விளையாட்டு ஆர்வத்தை ஊக்குவிப்பதற்காக நம்முடைய இளைஞர் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் முதல்வர் கோப்பை என்ற விளையாட்டுப் போட்டிகளை கடந்த ஆண்டு நடத்தினார்கள். அதில் 7 இலட்சம் நபர்கள் பதிவு செய்து அந்த போட்டிகளில் கலந்து கொண்டார்கள். இந்த ஆண்டு, கிட்டத்தட்ட 12 இலட்சம் நபர்கள் அந்த போட்டிகளில் பதிவு செய்து விளையாடி வருகிறார்கள். அந்த வாய்ப்புகளை எல்லாம் இந்த அரசு ஏற்படுத்தி வருகிறது. நம்முடைய மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் தான் எதிர்காலம் என்பதில் நாம் மிகவும் தெளிவாக இருக்கிறோம். அதில் புதிய தொழில்நுட்பங்களை ஆக்கபூர்வமான வழியில் பயன்படுத்தி நம்முடைய மாணவ மாணவிகள், இளைஞர் சமுதாயம் நம்முடைய நாட்டை ஒரு நல்வழியில் பயனுள்ளதாக செயலாக்கவேண்டும். அதனை நாம் அனைவரும் இணைந்து செயலாக்கவேண்டும். இதுபோன்ற விழிப்புணர்வு முயற்சி என்பது மிக மிக முக்கியமானதும் காலத்தின் கட்டாயமும் ஆகும். இந்த நிகழ்ச்சியை தொடங்கி வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன் என்று தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், தமிழ்நாடு இணையவழி விளையாட்டு ஆணையத்தின் தலைவர் முகமது நசிமுதின், (ஓய்வு), தமிழ்நாடு இணையவழி விளையாட்டு ஆணையத்தின் உறுப்பினர் முனைவர் எம்.சி.சாரங்கன், (ஓய்வு), மற்றும் அரசு உயர் அலுவலர்கள், பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள், பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.



தேனி தெற்கு மாவட்டம் ஆணைப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் கலைஞரின் வருமுன் காப்போம் மருத்துவ முகாமை தேனி தெற்கு மாவட்டச் செயலாளர் கம்பம். ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ துவக்கி வைத்தார். உடன் உத்தமபாளையம் கிழக்கு ஒன்றிய செயலாளர் அணைப்பட்டி முருகேசன், உத்தமபாளையம் ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் ஜிப்ரின், மாவட்ட பொருளாளர் பால்பாண்டி மற்றும் அரசு அதிகாரிகள் கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பில்

# மைலம் தொகுதியில் 'கலைஞர் நூலகம்'!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் - அப்துல் மாலிக் திறந்து வைத்தனர்!

மைலம், செப். 13-

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பில் மைலம் சட்டமன்றத் தொகுதியில் முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு கலைஞர் நூலகம் திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

கூட்டேரிப்பட்டு மயிலம் சாலையில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர் ப.சேகர் தலைமை தாங்கினார். மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆனந்த் அனைவரையும் வரவேற்றார். மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் டி.கே.பி.ரமேஷ், உதயகுமார், எம்.டி.பாபு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணிதுணை அமைப்பாளர்கள் விஜயகுமார், அண்ணாமலை ஆகியோர் ஏற்பாட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத் துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான், மாநில திமுக இளைஞரணி துணை செயலாளர் அப்துல் மாலிக் ஆகியோர்கலந்து கொண்டு முத்தமிழ் அறிஞர் கலைஞரின் திரு உருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி கலைஞர் நூலகத்தை திறந்து வைத்தனர்.

தொடர்ந்து நூலகத்தில் உள்ள பல்வேறு புத்தகங்களை பார்வையிட்ட அமைச்சர் செஞ்சி மஸ்தான், மாநில இளைஞரணி துணை செயலாளர் அப்துல் மாலிக் ஆகியோர் நூலகத்தில் புத்தகத்தை வாசித்தனர்.

இதில்முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேதுநாதன், செந்தமிழ்ச்செல்வன், மாநில தீர்மானகுழு உறுப்பினர் செஞ்சி சிவா, மாவட்ட துணை செயலாளர் அமுதா ரவிக்குமார், ஒன்றிய செயலாளர்கள் மணிமாறன், துரை, இளம்வழுதி, பொதுக்குழு உறுப்பினர் வீடூர்ரவி, மயிலம் ஒன்றிய துணை சேர்மன் புனித ராமஜெயம், மாவட்ட கவுன்சிலர்கள் விஜயன், மகேஸ்வரி குமரேசன், அன்பு செழியன், இளைஞரணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் மயிலம் தெற்கு ராமமூர்த்தி, பொண்ணு வேல், சங்கர், கார்த்திகேயன், ஆனந்தராஜ், மயிலம் வடக்கு இளங்கோவன், ராஜா, சக்திவேல், பிரதாப்,

வல்லம் தெற்கு செந்தமிழ் செல்வன், மோகன், மணிகண்டன், சசிகுமார், கண்ணப்பன், முருகதாஸ், ராஜ்குமார், வல்லம் வடக்கு விஜய் விக்னேஷ், மேகவர்ண்ணன், காண்டீபன், சங்கர், ஜெயபிரகாஷ், ஸ்ரீதர், பாக்யராஜ், சிவராமன், ரஞ்சித் குமார், ஹேமசாதன், மற்றும் சிறுபான்மையினர் நல அணி அமைப்பாளர் அன்சாரி, கலை இலக்கிய பகுத்தறிவு அணி அமைப்பாளர் செந்தில் குமார், விவசாய அணி மாவட்ட தலைவர் நெடி சுப்பிரமணியன் உள்ளிட்ட தி.மு.க.வினர் கலந்து கொண்டனர்.